FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8337241

1. District : Krishnagiri PS: VQAC Year: 2026 FIR No.: 14/Inc/2026 Date: 05.11.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a), 8 and
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 04.11.2026 Date to : before 12.45 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 05.11.2026 Time : 10.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 25 km west.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Sub-Registrar office Shoolagiri.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.G. Sakthivel (b) Father's/ Husband's Name : S.V. Govindasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age-51 (d) Nationality : Indian (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : PA to SDRO (g) Address : O/o the Special District Revenue officer [L.A] State Highways, Krishnagiri.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr.K. Subramaniam, Age-46, Sub-Registrar, O/o the Sub-Registrar, Shoolagiri, Krishnagiri Dt.
2) Tr.V. Sankar, Age 42, S/o Venkatesan, Contract Labour [Data Entry Operator], O/o the Sub Registrar office, Shoolagiri, Krishnagiri Dt.
3) Tr.S. Nagaraj, Age 51, S/o Sadhappa, D.No-03/776 1, Godium, Eanusonai, Krishnagiri Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted!

Separate Sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

05/11/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.11.2026 at 12.15 hrs.

Name: பெயர் ....S. Ravi....
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
VGAC, Krishnagiri.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 14/AC/2026 u/s 7(a), 8 and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 05.11.2026-ம் தேதி காலை 10.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலைகள் துறை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள்: 07.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில சார் பதிவாளராக பணிபுரிந்து வரும் திரு.K.சுப்பிரமணியம் அவர்கள் அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் வைத்து ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் சூளகிரி, பழைய உத்தனப்பள்ளி சாலையில் அமைந்துள்ள சூளகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பகல் 12.45 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டேன். ஆய்வுக்குழுவினர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழையும் போது, அங்கு வராண்டாவில் பத்திரபதிவு செய்யவந்த பொதுமக்கள் சிலர் அமர்ந்திருந்தனர். காவல் ஆய்வாளர் உதவியுடன் மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து யாரும் வெளியே செல்லாதவாறும், வெளியில் இருந்து உள்ளே யாரும் வராதவாரும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர் ஆய்வுக்குழுவினர் மேற்படி அலுவலகத்தின் மத்திய அறையில் நுழைந்தபோது மேற்படி அறையின் தெற்கு சுவற்றில் தென்மேற்கு மூலையில் சார்பதிவாளர் என்று பொருத்தப்பட்டிருந்த பெயர் பலகைக்கு கீழே வடக்கு முகம் பார்த்தவாறு இருந்த

இருக்கையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் K.சுப்பிரமணியம் என்றும், தான் சூளகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக கடந்த 10.06.2026-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரத்தை தெரிவித்தேன். மேலும், அங்கு பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களிடம் திடீர் தணிக்கை குறித்த விவரத்தினை கூறி அதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர் சார்பதிவாளர் திரு.K.சுப்பிரமணியம் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.650/-ஐ ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததாலும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டில், பக்கம் எண் 34-ல் 04.11.2026-ம் தேதி சார்பதிவாளர் ரூ.650/- கொண்டுவந்ததற்கான பதிவுகள் சரியாக இருந்ததாலும், அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சார் பதிவாளர் இருக்கை முழுவதும் சோதனை செய்யப்பட்டதில் சந்தேகத்திற்கிடமான பணமோ, வேறு ஆவணங்களோ கண்டறியப்படவில்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் V.சங்கர் என்றும், தான் கடந்த 2024-ம் ஆண்டு முதல் சூளகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் ZIGMA TECH PVT.LTD., என்ற நிறுவனத்தின் மூலம் Deta Entry Operator, -ஆக தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் திரு.V.சங்கர் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.10/-ஐ ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் கூறியதன்பேரில், அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டில், பக்கம் எண் 34-ல் 04.11.2026-ம் தேதி மேற்கொண்ட பதிவுகளை ஆய்வு செய்ததில், திரு.V.சங்கர் காலை அலுவலகத்திற்கு வரும்போது ரூ.200/- கொண்டுவந்ததாக பதிவுசெய்துள்ளார். மேலும் அவரிடம் விசாரணை செய்தபோது, அவர் காலை அலுவலகத்திற்கு வந்ததிலிருந்து வெளியே செல்லவில்லை என்றும் திரு.V.சங்கர் அவர்கள் தெரிவித்தார். திரு.V.சங்கர் அவர்கள் அலுவலகத்திற்கு பணம் ஏதும் எடுத்துவராமல், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக வரும் நபர்களிடமிருந்து கையூட்டாக பணம்

பெற்றுக்கொண்டு, அதனை ஈடு செய்வதற்காக அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் சொந்த பணம் கொண்டுவந்திருப்பதாக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற விவரம் தெரியவந்தது. பின்னர் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் S.ரேணுகா என்றும், தான் கடந்த 2025-ம் ஆண்டு முதல் சூளகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் ZIGMA TECH PVT.LTD., என்ற நிறுவனத்தின் மூலம் Deta Entry Operator, -ஆக தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் திருமதி.S.ரேணுகா அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.250/-ஐ ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததாலும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டில், பக்கம் எண் 34-ல் 04.11.2026-ம் தேதியிட்ட பதிவுகளை சரிபார்த்ததில் பதிவுகள் சரியாக இருந்ததாலும், அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு அங்கிருந்த பொதுமக்களிடம் பத்திரப் பதிவு வேலை முடித்தவர்களை வராண்டாவின் ஒரு ஓரமாக வரச்செய்து அவர்கள் ஆஜர்படுத்திய மணிபர்ஸ் மற்றும் கைப்பைகள் ஆகியவற்றில் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் சந்தேகத்திற்கிடமான பணமோ, வேறு ஆவணங்களோ கண்டறியப்படாததால் சோதனை மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் அலுவலகத்திலிருந்து வெளியில் அனுப்பிவைக்கப்பட்டனர். பின்பு, அலுவலகத்தின் உள் வராண்டாவில் அமர்ந்திருந்த சில நபர்களை அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில் 1) திரு.P.ராஜா என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தான் ஆவண எழுத்தராக இருந்துவருவதாகவும், தனது வாடிக்கையாளருக்கு பத்திரப் பதிவு செய்ய உதவிக்கு உடன் வந்ததாகவும் தெரிவித்தனர். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.1000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த மற்றொரு நபரான 2) திரு.I.வெங்கடேஷ், என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தான் தனது நண்பர்களான திரு.குணசேகரன் மற்றும் திரு.ஜெயசங்கர் ஆகியோர் இன்று கிரையம் செய்யும் ஆவணத்திற்கு சாட்சியாக இருப்பதற்காக வந்திருப்பதாக

தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.5000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது கை செலவிற்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 3) திரு.K.நஞ்சுண்டன், என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தான் தனது நண்பர்களான திரு.குணசேகரன் மற்றும் திரு.ஜெயசங்கர் ஆகியோர் இன்று கிரையம் செய்யும் ஆவணத்திற்கு சாட்சியாக இருப்பதற்காக வந்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.8000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது கை செலவிற்கு கொண்டுவந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதேபோல் அலுவலகத்தில் இருந்த மற்றொரு தனிநபரான 4) திரு.C.ஜெய்சங்கர் என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தானும், தனது நண்பரான திரு.குணசேகரன் இருவரும் சேர்ந்து, சூளகிரி சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட ஏ.செட்டிப்பள்ளி கிராமத்தில் உள்ள திரு.அன்பரசன் என்பவருக்கு சொந்தமான சுமார் 1 ஏக்கர் 40 சென்ட் நிலத்தினை இன்று கிரையம் செய்வதற்காக வந்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.65,000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, இன்று கிரையம் செய்யும் நிலத்திற்கு இரசீது எண் 7901/2026-ன்படி அரசுக்கு செலுத்துவதற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததாலும், அவர் இன்று கிரையம் செய்யும் ஆவணத்திற்காக அரசுக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ.64,140/- கொண்ட இரசீதினை பரிசீலணை செய்யப்பட்டதாலும் அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதேபோல், அலுவலகத்தில் இருந்த மற்றொரு தனிநபரான 5) திரு.K.B.குணசேகர் என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தானும், தனது நண்பரான திரு.குணசேகரன் இருவரும் சேர்ந்து, சூளகிரி சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட ஏ.செட்டிப்பள்ளி கிராமத்தில் உள்ள திரு.அன்பரசன் என்பவருக்கு சொந்தமான சுமார் 1 ஏக்கர் 40 சென்ட் நிலத்தினை இன்று கிரையம் செய்வதற்காக வந்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.5000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது கை செலவிற்கு கொண்டுவந்ததாக

தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதேபோல், அலுவலகத்தில் இருந்த மற்றொரு தனிநபரான 6) திரு.அபிஷேக், என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தான் குடும்பத்துடன் பெங்களூருவில் குடியிருந்து வருவதாகவும், சூளகிரி சார்பதிவாளர் அலுவலக எல்லைக்கு உட்பட்ட உள்ளட்டி கிராமத்தில் உள்ள தனக்கு சொந்தமான சுமார் 1 ஏக்கர் நிலத்தினை இன்று பெங்களூருவை சேர்ந்த திரு.அசோக் குமார் என்பவருக்கு கிரையம் செய்துவிட்டு, குடும்பத்துடன் சென்னை செல்வதற்காக வந்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.71,000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, இன்று தனது நிலம் கிரையம் முடித்துவிட்டு, குடும்பத்துடன் சென்னை செல்ல இருப்பதாகவும், அதற்காக வழி செலவிற்காகவும், உறவினர்களுக்கு பட்டாசு வாங்கிக்கொண்டு செல்வதற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கதக்கவகையில் இருந்ததால், அந்த பணம் அவரிடமே என்னால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தில் இருந்த மற்றொரு தனிநபரான 7) திரு.S.நாகராஜ் என்பவரை விசாரணை செய்தபோது, அவர் தான் தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், இன்று செம்பரசனப்பள்ளி கிராமத்தில் உள்ள திருமதி.ரத்தினம்மாள் என்பவருக்கு சொந்தமான சுமார் 63 செண்ட் நிலத்தினை இன்று கிரையம் செய்யும் பொருட்டு ஆவணம் தயார் செய்து ஆவண எண் 6553/2026-ன்படி கிரையம் செய்ததாகவும் தெரிவித்தர். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.35,000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். ஆனால் அவர் நில புரோக்கராக இருந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் வைத்திருந்த பணம் ரூ.35,000/-ஐ மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. பின்னர், ஆய்வுக்குழுவினர் சார் பதிவாளர் K.சுப்பிரமணியம் அவர்களை அழைத்துக்கொண்டு மேற்படி அலுவலக மத்திய அறையின் மேற்கு சுவரை ஒட்டி கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த நுழைவாயிலின் வழியாக நுழைந்து மேற்படி அலுவலகத்தின் தென்மேற்கு மூளையில் அமைந்திருந்த பூட்டப்பட்ட பழைய பதிவறையினை சோதனையிடுவதற்காக சார் பதிவாளர் K.சுப்பிரமணியம் அவர்களிடம் திறக்க சொன்னதன்பேரில், சார்பதிவாளர்

அலுவலகத்தில் பணிபுரியும் திரு.V.சங்கர் என்பவரிடம் கூறியதன்பேரில், திரு.சங்கர் அவர்கள், தன் வசம் வைத்திருந்த சாவியைகொண்டு மேற்படி அறையினை திறந்தார். மேற்படி அறையினை சார் பதிவாளர் K.சுப்பிரமணியம் முன்னிலையில் சோதனை மேற்கொண்டபோது, அந்த அறையின் தெற்கு சுவரில் தடுக்கப்பட்டிருந்த அலமாரியின் கீழ் பகுதியில் இருந்த ஆவணங்களுக்கு நடுவே ஒரு பச்சைநிற அலுவலக கவர் ஒன்று இருந்தது. அந்த கவரினை எடுத்து திறந்து பார்க்க அதில் 500 ரூபாய் தாள்கள் இரண்டு கட்டுகளாக இருந்தன. அதனை எண்ணிப்பார்க்கையில், அதில் ஒரு கட்டில் 500 ரூபாய் நோட்டுகள் 100 எண்ணிக்கையில் ரூபாய் 50,000/- (500X100=50,000), மற்றொரு கட்டில் 500 ரூபாய் நோட்டுகள் 60 எண்ணிக்கையில் ரூபாய் 30,000/- (500X60=30,000), என மொத்தம் ரூ.80,000/- (500X160=80,000), (ரூபாய் எண்பது ஆயிரம் மட்டும்) இருந்தது. அந்த பணம் குறித்து சார் பதிவாளர் திரு.K.சுப்பிரமணியம் அவர்களிடம் விசாரணை செய்ததில் அப்பணம் அங்கு எவ்வாறு வந்தது என்று தனக்கு ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேலும் மேற்கண்ட தொகைக்கு எவரும் உரிமை கோரவில்லை. எனவே இப்பணம் சூளகிரி சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக மேற்படி பணம் இந்நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் சூளகிரி சார்பதிவாளர் அலுவலகத்தின் 04.11.2026-ம் நாளது A-கணக்கு விவரம், அலுவலக வருகைப் பதிவேடு, தொகுப்பு பணியாளர்களின் வருகைப்பதிவேடு, தனி நபர் பண இருப்பு பதிவேடு மற்றும் இயக்கப் பதிவேடு ஆகியவற்றை நானும், காவல் ஆய்வாளர் அவர்களும் பார்வையிட்டு, மேற்படி பதிவேடுகளில் கையொப்பம் செய்து அவற்றின் ஒளிநகல் எடுத்து சார் பதிவாளர் திரு.K.சுப்பிரமணியம் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினேன். இந்த திடீர் சோதனையின் போது சூளகிரி சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் அலுவலகத்தில் இருந்த நில புரோக்கரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,15,000/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.K.சுப்பிரமணியம், தற்காலிக பணியாளர் திரு.V.சங்கர் மற்றும் தனிநபர் திரு.S.நாகராஜ் ஆகியோரது வாக்குமூலத்தை திடீர் சோதனையின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். சூளகிரி சார்பதிவாளர் அலுவலக சார்பதிவாளர் திரு.K.சுப்பிரமணியம், தற்காலிக பணியாளர் திரு.V.சங்கர் மற்றும்

தனிநபர் திரு.S.நாகராஜ் ஆகியோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் திரு.G.சக்திவேல்).

மேற்கண்ட புகாரினைப் பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, மேற்குச் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி, கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, குற்ற எண். 14/AC/2026 u/s 7(a), 8 and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018-ன்படி இன்று 05.11.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களைச் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

05/11/2026
Inspector of police
V.S.Ae Krishnagiri